30th March 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம்.

(இ) இந்த மருத்துவ மனைகளின் பணியாளர்களை அரசாங்கப் பணியில் சேர்த்துக்கொண்ட பின்புதான், அவர்களுக்கு அரசாங்க சம்பள விதப்படி சம்பளம் வழங்கப்படும். இது குறித்து இன்னும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அவர்களைப் பற்றிய குறிப்புகளெல்லாம் கீழேயிருந்து டி.எம்.எஸ். ஆபீஸுக்கு வந்து விட்டன. இதைப் பரிசீலிப்பதில் கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இன்னும் டி.எம்.எஸ். ஆபீஸிலிருந்து தகவல் வரவில்லை, வந்த பின் தான் பரிசீலிக்க வேண்டும்.

Primary Health Centre at Poonimangadu

* 532 Q.—Sri C. CHIRANJEEVULU NAIDU: Will the Hon. the Minister for Public Health be pleased to state with reference to the answer given to Question No. 78 placed on the Table of the House on 1st April 1965 whether the construction of Primary Health Centre buildings and staff quarters at Poonimangadu village in Thiruvalangadu Panchayat Union, in Chingleput district has been completed?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: No.

சிதம்பரம் பிச்சைக்காரர் விடுதி

* 533 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியம்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரத்திலுள்ள பிச்சைக்காரர்கள் விடுதியில் எத்தனை பிச்சைக்காரர்கள் இருக்கின்றனர்கள்?

(இ) அவர்களுக்குத் தொழிற்பயிற்சி ஏதேனும் அளிக்கப்பட்டு வருகிறதா?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (a) 31.

(b) No. But training was imparted to the inmates in mat-weaving till January 1966.

Sri C. CHIRANJEEVULU NAIDU: Regarding this building at Poonimangadu, the construction of medical officers' quarters has been completed. The construction of the remaining building—hospital and staff quarters—has to be completed. The emergency provision need not be applied to it, as it is only a case of completion of an incomplete building. May I request the Government to consider this?

[30th March 1966

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Recently the hon. Member has given a representation regarding the Primary Health Centre and the Government are considering it.

Thandarai-Vaipur Road

* 534 Q.—SRI A. ARUMUGAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether lands have been acquired for the formation of a road from Thandarai Railway Station to Vaipur in Tiruvannamalai taluk, North Arcot district;

(b) if so, the number of acres so acquired;

(c) whether the compensations have been awarded; and

(d) if not, the reasons therefor?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) முதல் (எ) வரை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகளைச் சேர்ந்த இந்தச் சாலைப் பணி, மாவட்டக் கழகம் நிறைவேற்றுவதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஒரு பணியாகும். இது இப்போது, அரசாங்கப் பணியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. ஜமீன் அகரம் கிராமத்தில் நான்கு பர்லாங்கு நீளமுள்ள சாலையைத்தவிர எஞ்சிய சாலை அமைக்கப்பட்டு விட்டது. ஆனால், நில ஆர்ஜித நடவடிக்கைகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. இச்சாலை அமைப்பில் ஏறக்குறைய 20 ஏக்கர் நிலம் சம்பந்தப்பட்டுள்ளது. ஜமீன் அகரத்திலுள்ள நிலத்தைத் தவிர மற்ற நிலத்தின் மதிப்பு நிச்சயிக்கப்பட்டு விட்டது. ஜமீன் அகரத்திலுள்ள நிலத்தைக் கட்டாயமாக ஆர்ஜிதம் செய்யவேண்டிவரலாம். நில ஆர்ஜித நடவடிக்கைகள் முடிவு செய்யப்படவில்லையாதலால், இந்த நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை இன்னும் வழங்கப்படவில்லை.

தங்கப் பத்திரத் திட்டம்

* 535 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர்:
திரு. செ. மாதவன்: } கனம் முதல்
திரு. கரு. சீமைச்சாமி:

9-30 a.m. அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தங்கப் பத்திரத்திற்கு இதுவரை எவ்வளவு தங்கம் திரட்டப்பட்டிருக்கிறது, ஜில்லாவாரியாக?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: விவர அறிக்கை[a] ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. செ. மாதவன்: தங்கம் வசூலிக்கும்பொழுது தங்கத்தினுடைய காரட் எத்துணை என்று சரியாக பரிசீலிப்பதற்கு கிராமங்களில் வசதி செய்யப்படவில்லையே? ஆகவே, தங்கம் வசூலிக்கும் பொழுது இது சம்பந்தமாக தவறுகள் ஏற்படலாம். இது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா?

---

a 522–523-ம் பக்கங்களில் ஆறுவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.